III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.29/2013

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 08-01-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான் வெஸ்லி | Village | : |
| Father's Name | : வேதநாயகம் | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. நான் ஆங்கிலத்தில் கையொப்பமிடுவேன். நான் தாக்கல் செய்த இந்த வழக்கில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியும். சதீஷ் மற்றும் துரைராஜ் ஆகியோரின் மீது 08.04.2011 தேதியிட்ட ஒப்பந்தத்தை ஏற்படுத்தி என்னை மோசடி செய்துவிட்டார்கள் ஆதலால் அது சம்மந்தமாக பரிகாரம் கேட்டுள்ளேன். அந்த ஒப்பந்தம் செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 7085 சதுரடி. எனது வழக்குரையில் துரைராஜ் என்னை கடத்தி சென்று 08.04.2011 தேதியிட்ட ஒப்பந்த ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆம். அந்த விவரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மனோவாவிற்கு என்றைய தேதியில் பவர் கொடுத்தேனா என்றால் நான் அவருக்கு பவர் கொடுக்கவில்லை. 29.12.2010 அன்று பிலால் அகமது என்பவருக்கு பவர் கொடுத்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் ஆம். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த சங்கதிகளை புரிந்து கொண்டுதான் நான் கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது திரு.மதிவாணன் என்ற வழக்கறிஞரை நியமித்தேன். எனது வழக்குரையில் துரைராஜ் என்னை அனுகி வழக்கு சொத்தை நல்ல விலைக்கு விற்றுத்தருவாதாக என்று என்னிடம் கூறினார் என்றால் சரியல்ல. அதை தொடர்ந்து பிலால் அகமது மூலமாக துரைராஜுடன் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் நான் மறுக்கிறேன். என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் 10.02.2011 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் என்னை கடத்தி மிரட்டி வாங்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 10.02.2011 தேதியிட்ட

S BALAKRISHNAN
Digitally signed by S BALAKRISHNAN
Date: 2025.01.08 17:14:30 +0530

ஒப்பந்தத்தை துரைராஜ் என்பவர் என்னை மிரட்டி வாங்கினார் என்பதை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம். அந்த விவரத்தை நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

தற்போது எனக்கும் மனோவாவிற்கும் இடையில் சுமூகமான உறவில் உள்ளது. எனக்கும் மனோவாவிற்கும் இடையேயான கிரைய ஒப்பந்த தேதி 02.03.2011. எனது பவல் ஏஜென்ட் மூலமாக நானும் எனது அந்த ஒப்பந்தபடி கிரைய தொகை 20 லட்சம் என நிர்ணயிக்கப்பட்டது. 10.02.2011 தேதியிட்ட ஒப்பந்தத்தில் கிரைய தொகை ரூ.2,40,00,000/– என குறிப்பிடபட்டுள்ளது. மனோவாவுடன் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தம் மற்றும் 10.02.2011 கிரைய ஒப்பந்தம் ஆகியவை வழக்கு சொத்திற்கானது தான். ரூ.20 லட்சத்திற்கு நான் கிரைய ஒப்பந்தம் போட்டிற்கும் பட்சத்தில் ரூ.2,40,00,000/–ற்கு கிரைய ஒப்பந்தத்தை யாராவாது மிரட்டி வாங்குவார்களா என்றால் இல்லை. 08.04.2011 தேதியிட்ட 2 வது பிரதிவாதியிடம் ஏற்படுத்தி கொண்ட ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னை கடத்தி கொண்டு சென்று பதிவு செய்தார். அந்த விவரத்தை நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருப்பேன்.

(கற்றறிந்த 2 ம்பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

S BALAKRISHNAN

Digitally signed by S BALAKRISHNAN
Date: 2025.01.08 17:14:44 +0530